தமிழ்

மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு

மலர் 2 | ஆகஸ்டு 1942 | இதழ் 8

L. I. M. களும் போரும்

போரில் சேரும் L. I. M. களுக்கு, கம்பௌண்டர்களுக்குக் கொடுக்கப்படும் சப்பளம் முதலியனதான் அளிக்கப்படுமென்று இந்திய சர்க்கார் முடிவு செய்து, சர்ஜன் ஜெனரல் ஆபீஸ் மூலம் L. I. M. களைப் போரில் சேர்க்க விளம்பரஞ் செய்கின்றனர். அவ்வளவு கீழ்த்தரமான பதவியை விரும்பி ஒரு L. I. M. மும் போரில் சேரான்; ஆகையால் இந்திய மருத்துவ சாலையிலும் பள்ளியிலும் விளம்பரம் செய்வதில் பயனில்லை. இதை முன்னதாக உணர்ந்து அவ்விடங்களில் இன்றும் விளம்பரஞ் செய்யாதிருப்பது போற்றத் தக்கதே. ஆயின் பைத்தியக்கார ஆஸ்பத்திரி, ஜெனரல் ஆஸ்பத்திரி, ஸ்டான்லி மெடிகல் காலேஜ், சென்னை மெடிகல் காலேஜ் முதலிய இடங்களில் விளம்பரப்படுத்தியதன் காரணம் எமக்கு விளங்கக்கூடியதாக வில்லை. அந்தப் பைத்தியக்கார ஆஸ்பத்திரி முதலிய இடங்களில் M. B. B. S. கள் தானே இருக்கிறார்கள்; அங்கு ஒரு L. I. M. மும் (நோயாளியாகக்கூட) இல்லையே! அங்ஙனமிருக்க, அங்கு வெளியிட்டது என்? அந்த விளம்பரம் முற்றும் பயனின்றி, வீணாய்ப்போக மனஞ்சகியாது, சிலருக்காவது களிப்பையுண்டாக்கப் பயன் படட்டுமெனக்கருதியோ? அதைக்கண்டு, களிப்பாரும் அங்குளரோ? இரார். எனெனில், I. M. S. ல் வேலை செய்யும் இந்தியர்களுக்கும் சில உரிமைகள் அளிக்க வேண்டுமென்று பல வருடங்களாக வாக்காடி அவைகளில் சிலவற்றை இப்பொழுதுதானே அந்த M. B. B. S. களும் பெற்றனர். அங்ஙனம் இருக்க, அதை மறந்து, வேறொருவருக்குக்

கீழ்த்தரமான உரிமைகள் அளிக்கப்பட்டால் அவர்கள் நகைப்பார்களா? நகையார்கள். ஆகையால், மேலும் எவ்வித விளம்பரமும் செய்யாது நிறுத்திக்கொண்டு, அதனால் செலவழிக்கநேரும் பணத்தைத் தக்க வழியில் போருக்காக செலவழிப்பதே உசிதமாகும்.

ஐந்து ஆண்டுகள் ஆங்கில விரண வைத்தியம், மருத்துவம் பிள்ளைப்பேறு முதலியவைகளையும் படித்துப்பழகி தேறிய L. I. M. களுக்கா இவ்வளவு கீழ்த்தரமான பதவி அளிக்கப்பட்டது என்று வியப்புறுகிறோம். தேசபக்தி, இராசபக்தியுடன் தாங்களாகவே போரில் உழைக்க முன்வரவில்லையா? L. I. M. கள் சற்றும், மனந்தளராது தங்கள் நியாயமான உரிமைகளைப் பெற M. B. B. S. களைப் போலவே வாதாடவேண்டும்.

L. I. M. கேட்பதெல்லாம், L. M. P. களுக்கு வழங்கிவரும் உரிமைகளைத் தங்களுக்கும் அளிக்கவேண்டுமென்பதுதானே. இந்தக் கோரிக்கை மிகவும் நியாயமானது. ஆகையால், சர்க்கார் மீண்டும் புனராலோசனை செய்து L. I. M. களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று கோருகிறோம்.

இந்திய மருத்துவ மாணவர்களின் கூட்டம்

கவர்ன்மெண்டு இந்திய மருத்துவசாலை மாணவர்கள் 1942-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 27ந்தேதி மாலை 4-45 மணிக்கு கீழ்ப்பாக்கம் வெக்ஸ் போர்டில் G. O. No. 51 E. M. -War ஐப்பற்றி ஆலோசிப்பதற்காக, டாக்டர் C. துவாரகநாத், L. I. M., Z. T. அவர்களின் தலைமையில் கூடினர். பலர் பேசினர். பிறகு பல தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு டைரக்டர் ஜனரல், இண்டியன் மெடிகல் சர்விஸ், புதுடெல்லி; சென்னை கவர்னர்; சர்ஜன் ஜனரல் இவர்களுக்கும், மற்றும் சிலருக்கும் அனுப்பப்பட்டன. முக்கியமான தீர்மானங்களாவன :—

1. S. S. L. C. படித்து, பிறகு ஐந்து ஆண்டுகள் இந்திய மருத்துவத்துடன் Anatomy, Physiology, General Science, Pharmacology, Pathalogy, Bactriology, Medicine, Surgery, Midwifery, Forensic medicine முதலியவைகளையும் ஆங்

கிலத்தில் படித்துத் தேறிய எல். ஐ. எம். களுக்கு மேற்படி கவர்ன் மெண்ட் உத்தரவுபடி அளித்துள்ள பதவி மிகவும் கீழ்த்தரமானதாயும், அவமரியாதையாயும் காணப்படுவதால் தங்களின் மறுப்பைத் தெரிவிக்கின்றனம்.

2 எல். ஐ. எம். கள் வைத்தியம் (மருத்துவம், விரணவைத்தியம், பிள்ளைப்பேறு, முதலியவைகளையும்) செய்யப் பயிற்சி பெற்றவர்கள் என்று கூறும் G. O. 231 of 1–2–33 சட்டத்தை, மேற்படி உத்தரவைப் பிறப்பித்தவர்கள் பார்க்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றனம்.

3. மற்றும் ஆங்கிலமுறை வைத்தியர்களுக்கு ஏற்படுத்திய நூற்றுக்கணக்கான வைத்தியசாலைகளில் இப்பொழுது எல். ஐ. எம். கள் அவர்களுக்குப் பதிலாக இருந்து பல வருடங்களாக நல்ல சேவை செய்துவருவதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றனம்.

4. இந்திய மருத்துவ சாலையின் தலைவரையோ அல்லது எல். ஐ. எம். சங்கத்தையோ கலவாது மேற்படி உத்தரவைப் பிறப்பித்ததுமன்றி அது இன்றும் அவர்களுக்கு அனுப்பப்படவில்லையென்றும் ஆனால் எல். ஐ. எம். களைப்பற்றி அக்கரையில்லாதவர்களுக்கும், அவர்களில்லாத வேறு மருத்துவசாலைகளுக்கும் அனுப்பப்பட்டதாகவும் அறிகிறோம். இச்செய்கை சண்டையில் வேலைசெய்யத் தாங்களாக முன்வந்த எல். ஐ. எம். களைத் தாழ்வுபடுத்துவதாக இருக்கிறதாகையால் அவ்வுத்தரவை வாபீஸ் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று கோருகிறோம்.

போரில் L. M. P. களுக்கு அளித்துள்ள சம்பளம் பதவி முதலியவைகளையாவது எல். ஐ. எம், களுக்கு வழங்கினாலொழிய ஒரு எல். ஐ. எம். மும் தன் மதிப்பை இழந்து போருக்கு வரமாட்டானென்று அரசாங்கத்தாருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

பிறகு சர்ஜன்ஜனரலைக் காண ஐந்து மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுக் கூட்டம் கலைந்தது.

தாரை

(107 ம் பக்கத் தொடர்ச்சி)

தாரை செய்யவேண்டிய காலமும் அளவும்:—

தாரை செய்வதற்குக் காலை நேரமே 6-30 முதல் 8 மணி வரை நன்று, தோடங்கள் அதிக வேற்றுமைப் படாமலும், அதிக உஷ்ணம் அல்லது குளிர் இல்லாமலும், மழையில்லாமலும் இருக்கக்கூடிய காலத்தில் செய்யவேண்டும். மலையாளத்தில் கர்க்கடக மாதம் (ஜூலை மத்தியிலிருந்து ஆகஸ்டு நடு வரைக்கும்) துலா மாதம் (அக்டோபர் மத்தியிலிருந்து நவம்பர் நடுவரைக்கும்) கும்பமாதம், (பிப்ரவரி மத்தியிலிருந்து மார்ச்சு மத்தி வரைக்கும்) தாரை செய்ய உகந்த காலங்கள் என்று கருதப்படுகின்றன. மேற் சொல்லிய காலங்களுக்கு இரண்டு வாரங்கள் முன்பும், பின்புங்கூடச் செய்வதுண்டு. அவசர நிமித்தம் எக்காலத்திலும் செய்யலாம்.

சாதாரணமாகத் தாரையை 14 அல்லது 21 நாட்கள் செய்ய வேண்டும். இது ஒரு முறையாகும். 28 நாட்கள் வரையிலுங்கூட சமயோசிதமாகச் செய்வதுண்டு. ஒரு நாளைக்கு அரை மணி முதல் ஒன்றரைமணி வரையில்தான் செய்யவேண்டும். அதற்குக் குறைவாகவோ அதிகமாகவோ செய்யக்கூடாது.

பதினன்கு நாட்களுக்குச் செய்வதாக இருந்தால் முதல் நாள் ஒரு மணி நேரமும், இரண்டாம்நாள் தொடங்கி ஏழாம்நாள் வரைக்கும் தினம் தினம் ஐந்து ஐந்து நிமிடங்கள் அதிகப்படுத்தி வர வேண்டும். இங்ஙனம் செய்ய, ஏழாம்நாள் ஒன்றரைமணி நேரம் செய்ய நேரும். எட்டாம் நாளும் அவ்வளவாகச் செய்து, மறுநாளிலிருந்து தினந்தோறும் ஐந்து ஐந்து நிமிடங்கள் குறைத்து வரவேண்டும். இவ்வாறு செய்யப் பதினன்காம் நாள் ஒரு மணி நேரம் செய்ய நேரும்.

இருபத்தோர் நாட்கள் செய்யவேண்டின், முதல் நாள் ஒரு மணி நேரமும், இரண்டாம் நாள் தொடங்கி ஏழாம் நாள் வரையிலும் ஒவ்வொருநாளும் பத்து நிமிடங்கள் வீதம் அதிகப்படுத்த வேண்டும். இப்படிசெய்ய ஏழாம் நாள் இரண்டு மணி நேரம் செய்யவேண்டி வரும். இப்படியே மேலும் எட்டுநாள் செய்து, பிறகு தினந்தோறும் பத்து நிமிடங்களாகக் குறைத்து வரவேண்டும். இங்ஙனம் செய்ய இருபத்தோராம் நாள் ஒரு மணி நேரம் செய்ய வரும்.

"தாரை" யில் கூறிய கூட்டு சரக்குகளின் விளக்கம்

1. மகா பஞ்ச மூலம்
   வில்வ வேர்
   பெருங் குமிழ் ,,
   பெருவாகை ,,
   பாதிரி ,,
   முன்னை ,,
2. இலகு பஞ்ச மூலம்
   கண்டங்கத்திரி வேர்
   சிறு மல்லிகை ,, கஞ்சாங் கோரை
   பெரு ,, ,, வெதுப் படக்கி
   சிறுவழுதுணை வேர்
   சிறுநெரிஞ்சில் ,,
3. மத்யம பஞ்ச மூலம்.
   சிற்றுமுட்டி வேர்
   சாரணை ,,
   ஆமணக்கு ,,
   நரிப்பயறு ,,
   காட்டுளுந்து ,,
4. ஜீவன பஞ்ச மூலம்.
   மேதா
   ஜீவந்தி
   ஜீவகம்
   ருஷபகம்
   சதாவேரி
5. திருண பஞ்ச மூலம்.
   தர்ப்பை வேர்
   நாணல் ,,
   கரும்பு ,,
   பேய்க் கரும்பு ,,
   சம்பாத்தாள்
6. தசமூலம்.
   சிறுமல்லி வேர்
   பெரு மல்லி ,,
   கண்டங்கத்திரி ,,
   சிறு வழுதுணை ,,
   நெரிஞ்சி ,,
   வில்வம் ,,
   பாதிரி ,,
   முன்னை ,,
   பெருவாகை ,,
   குமிழ் ,,
7. ஜீவநீயகணம்.
   ஜீவந்தி (அம்மான் பச்சரிசி)
   காகோளீ
   க்ஷீரகாகோளீ
   மேதா
   மகா மேதா
   முத்கபர்ணீ (காட்டு பயறு)
   மாஷபர்ணீ (காட்டுஉளுந்து)
   ருஷபகம்
   ஜீவகம்
   மதுகம் (அதிமதுரம்)
8. பஞ்சகந்தம்.
   இலவங்கம்
   ஏலம்
   கர்ப்பூரம்
   சாதிக்காய்
   தக்கோலம்

எண்ணெய், கியாழம் முதலியவற்றின் முறைகள் வேறு இதழ்களில் வெளிவரும்.

(தாரையைக் குறித்து எழுதுவதற்கு எமக்கு உதவிய டாக்டர்கள் வேங்கடசாமி, M. B. B. S., F. I. M., K. K. நம்பியார், L. I. M. அவர்களுக்கு எமது நன்றி உரியது.)

திருத்தம் :— 84ம் பக்கத்தில் ஜீவனேயகணம் என்பதை ஜீவனீயகணம் என்று படிக்கவும்.

(116 ம் பக்கம் பார்க்க)

வேறு தேரர் கரிசல்

இரசபற்பம்

தமிழ்ப்பண்டிதரும், மருத்துவ பண்டிதருமான
மா. வடிவேலு முதலியார்.

பார்புக ழினியொரு சேரெடு சுத்திசெய்
நீரழ லுப்பொடு செங்கலி லிட்டதை
மேலிடு கடமெரி சுடுதழல் தனிலிடு
சாலிடு நீற்றிணை யெடுசரி நிறையே
எடுவிடு சங்கநீ ரிதிலரை ரவியில்வை
கடுமதி நிறமது காசரை யிருகால்
நீர்தனி விடுநா ளேழதில் வெகுரணம்
வேர்கெடும் ரணகு லைகள்வெடி சூலைகள்
திண்படு மரிகிரந் திகள்பல வகைசேர்
புண்படு ரணவிப் புருதிகள் பிளவைகள்
வாதம் படுவன் வருமரை யாப்பு
மீதி னிரண மேக முதிர
வாயுக ணெஞ்சடை வலிரணம் வயிற்றுநோய்
தேயுந் தொடைரணம் சிராவண முதலாம்
ரணமதில் வருமறு நூற்றுக் கும்வெகு
குணமிகு பாத ரசமிதை யுள்ளிடக்
களிகடு கருவேல் கருநெலி நாவல்
வளிதீ யெரிநீர் வைத்திடு கொப்புளி
வாய்வே மதுவிடும் வைத்திடு வறுகும்
காய்நீர் மிளகுட னிட்டிடு வெண்ணெயை
அதிலிடு குடிரச வீறஃ தடிபடும்
அதிகுண பாதரச பற்ப மதற்கே.

(சோ-ரை) பார்-(மருத்துவ) உலகத்தார், புகழ்-சிறப்பிக்கின்ற, இனி-இரசத்தை, ஒருசேர் எடு-(கச்சாசேர் என்னும்) எட்டுப்பலம் எடு, சுத்திசெய்-தங்கரசபற்பத்திற்குச் சொல்லியிருப்பது போல் தூய்மைசெய், நீர்-கடல் நீரானது, அழல்—சூரிய வெப்பத்தால் பூர்கிற, உப்பொடு-சோற்றுப்புடன், செங்கலில்-செங்கல் தூளிலும், அதை இட்டு-மேற்படி தூய்மை செய்த இரசத்தை விட்டு, மேல்கடம் இடு—அப்படி இரசம் வைத்திருக்கிற சட்டியில் மேல்சட்டி மூடி (மண்சீலை செய்து) உலர்த்தி, சுடுதழல் தனில் இடு—நெருப்பில்வை, எரி- (எட்டுச்சாமம்) எரிப்பாய், அப்படி எரித்து அடுப்பை

விட்டு இறக்கிப் பிரித்து, சால் இடு நீற்றின் - மேற்சட்டி யில் எறியிருந்த பதங்கத்தை, எடு-எடுப்பாய், அவ்வாறு எடுத்து அதை நிறுத்துக் குழிக் கல்லிலிட்டு அதை, சரி நிறை-அந்தப்பதங்கத் தின் எடை, சங்கநீர் எடு விடு-சங்கத் திராவகம் எடுத்து விட்டு, இதில் அரை-இத்திராவகத்தால் அரைத்து ரவியில்லை-அரைத்த கல்வத் துடன் வெய்யில்லை, அவ்வாறு உலர்த்தினுல், (அது) கடு மதி நிறம் - திங்களினது வெள்ளிய நிறமாயிருக்கும். அது - அதை, காசு அரை-அரைச்காசெடை, இருகால்-இரண்டு வேளையும், நாள் ஏழ் நீர்தனில் இடு-ஏழுநாள் தண்ணீரில் கொடுப்பாய், அதில்-அவ்வேழ் நாள்களில், வெகு ரணம் வேர் கெடும்-அநேக ரணநோய்களின் வேரற் றுப்போம், (அவை) ரண சூலைகள் வெடி சூலைகள்.........வருமறு நூற்றுக்கும்-ரண சூலைகள், வெடி சூலைகள், அரிகிரந்தி, பலவகைப் பட்ட புண்ணோடு வருகின்ற ரண விப்புருதிகள், பிளவைகள் வாத நோய்கள், படுவன், அரையாப்பு, தோல்மேல் வருகின்ற விரண நோய் கள், மேகம் என்னும் நீர் நோய்கள், குருதிவளி என்னும் ரத்த வாதங் கள், மாரடைப்பு, மார்நோய், வலிநோய்கள், இதர ரண நோய்கள், வயிற்றுநோய், தொடையில் வரும் விரண நோய்கள், சிராவணம் முதலாகச் சொல்லப்படுகின்ற அறு நூறு இரண நோய்களுக்கும், வெகு குணம் மிகு-மிக்க நற்குணத்தைச் செய்கின்ற, பாத ரசம் இதை-இவ்விரச பற்பத்தை, உள் இட-உள்ளுக்குக் கொடுத்தால், களி கடு கருவேல் கருநெல்லி நாவல்-களிப்பாக்கு, கடுக்காய்த்தோல், கரு வேலம்பட்டை, கறுத்த நிறத்தை அடைவிக்கின்ற நெல்லிவற்றல், நாவற்பட்டை என்னும் இவைகளையெல்லாம் சரிஎடை எடுத்து இடித்து ஒரு மட்சட்டியிலிட்டு எட்டுக்கொண்ட நீர்விட்டு, தீ யெரிநீர் வைத்திடு-அடுப்பிலிட்டுக் காய்ச்சின குடிநீரால், கொப்புளி-வாய் கொப்புளிக்க வேண்டும், அவ்வாறு செய்தால், வாய் வேம் அது விடும்-மேற்படி இரசபற்பம் தின்றதினுல் உண்டான வாய்இரணம் ஆறிவிடும்; அறுகும்-கணுநீக்கின அறுகங்கட்டையும், மிளகுடன்-மிள கும் (சதைத்து இட்டு) காய் நீர்-குடிநீராக, இட்டிடு-காய்ச்சி விடு, அதில் வெண்ணெயை இடு-அக்குடிநீரைக் குடிக்கும் ஒவ்வொரு முறையும் ஒரு கொட்டைப்பாக்களவு பசு வெண்ணெய் போட்டு அது கரைந்தவுடன், குடி-குடிப்பாய், அப்படி குடித்தால், ரசவீறு அஃது அடிபடும்-ரசபற்பத்தால் நேர்ந்த வாய் வேக்காட்டை மேற்படி களிப் பாக்கு முதற் குடிநீர் ஆற்றிவிட்டதுபோல், வயிற்றினுள் ஏற்படும் இரசபற்ப வீறும் ஆறும். ஆகையால், அதற்கு — அப்படிப்பட்ட நற்றன்மை வாய்ந்த அந்நீற்றினுக்கு, அதிகுணம் — மிக்க நற்குணத் தைச் செய்கின்ற, பாதரச பற்பம்-பாதரச பற்பம் என்கிற பேராகும்.

(இதன் உரிமை ஆக்கியோருக்கே உண்டு)

நோய்ப் பெயர் வரலாறு

Dr- N. சுப்பிரமணியம், L. I. M.
(Member, Central Board of Indian medicine)

(98 ம் பக்கத் தொடர்ச்சி)

உடலில் உயிர் ஒன்றல்

இவ்வித உடலில் உயிர் இயல்பாய் வந்து சேரும். உயிர் உணருந் தன்மைத்து,

யானிளைத்தேன் பருத்தேன் என்புழி தூல சரீரத்தோடும், யான் கேட்பன், பரிசிப்பன், காண்பன், உண்பன், மோப்ப னென் புழி ஞானேந்திரியங்களுடனும், யான் வசனிப்பன், கொடுப்பன், கமனிப்பன்' விசர்ச்சிப்பன், ஆனந்திப்பன் என்புழி கன்மேந்திரியங் களுடனும் கூடி அவற்றின் குணங்களுக்கு இலக்கணமா யிருந்து உணர்வது உயிர்.

உடலமாகிய விளைநிலம்

உடலத்தை விளைநிலமாக உவமை கூறி விளக்கி நிலம், காலம், தொழில், உணவு, நடை, மன எழுச்சி, நிகழ்ச்சி, கருப்பம் இவை பற்றிய விளக்கங்களை எழுதுவதானல் மிக விரியும் என அஞ்சியும் இவைபற்றிய விரிவுரைகளைத் தமிழ் நூல்களில் தடையின்றிக் காண லாமாகையாலும் விடப்பட்டது.

ஐம்பூத இயற்கைநிலைச் செயல்கள்

ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தும் ஐம்பூதங்களின் இயற்கை நிலைச் செயல்கள்.

இவைகளில் மறைத்தல், அருளல் என்ற இரண்டும் விண்ணுக் கும் மண்ணுக்கும் ஆனது என்பதை,

மன்னுடனீர் நெருப்பு கால் வானமென் றிவைதா
மெண்ணிய பூதங்களென் றறிந்து — நண்ணிய
மன்னர்க்கு மண் கொடுத்து மாற்றார்க்கு விண்கொடுத்த
தென்னவர் கோமானே தெளி. —இசைநுணுக்கம் (தொடரும்)

(114 ம் பக்கத் தொடர்ச்சி)

அஷ்டவர்க்க சரக்குகளாகிய காகோளீ, க்ஷீரகாகோளீ, மேதா மகா மேதா, ருஷபகம், ஜீவகம், ருத்தி, வ்ருத்தி இச்சரக்குகளுக்கு ஜீவனீயகணத்தின் குணங்களுண்டு. இவை கிடைக்காமையால் அமுக்கரா தண்ணீர்விட்டான், பூசக்கரை, நிலப்பனை ஆகிய நான்கு கிழங்குகளையும் அவைகளுக்குப் பதிலாக உபயோகிக்கின்றனர். ஜீவனீயகணத்தை ஜீவந்தியாதி கணமென்று கருதுகின்றனர்.